[17th August 1960

SRI A. A. RASHEED : May I know the reason for not accepting the suggestion of the Council?

THE HON. SRI C. SUBRAMANIAM : This would mean further delay in admission to various colleges. Firstly, a preliminary list will have to be prepared by the Regional Board and it is not as if automatically all of them would get admitted here. Again there will have to be scrutiny at each college level. It would mean taking much more time than we take to-day. That would not only affect admissions to Engineering Colleges but also admissions to various Arts and Science Colleges. That is why it is not possible to accept the suggestion of the Council and the method we are adopting here is quite all right. There is nothing wrong.

SRI A. A. RASHEED : May I know whether other States in this Region have accepted this suggestion?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not to my knowledge.

Map-burning campaign

*218 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of Sri M. P. SARATHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட கழகத்தினர், நாம் தமிழர் இயக்கத்தினர் 5—6—1960-ம் தேதி நடத்திய தேசப்பட எரிப்பு போராட்டத்தையொட்டி கி.பி.கோ. 144-வது பிரிவின்படி எந்தெந்த இடங்களில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது ?

(ஆ) வடாற்காடு மாவட்டம், வேலூர் நகரில் அன்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுலில் இருந்ததா ?

(இ) அதே நாளில் ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரசுகாரர்கள் வேலூர் பாரக்ஸ் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்தினரா ?

(ஈ) அந்தக் கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Prohibitory orders under section 144, Criminal Procedure Code, were promulgated only in Chidambaram taluk, South Arcot district.

(b) No, Sir.

(c) & (d) Yes, Sir.

Use of waters of Kuduvanar

*219 Q.—SRI N. R. THIAGARAJAN: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, கொடைக்கானல் தாண்டிக்குடி மலைகளில் உற்பத்தியாகி திருச்சி ஜில்லா, குளித்தலை தாலுகா வழியாக ஓடும் குடவனாற்றுத் தண்ணீரை குளித்தலைவாசிகள் உபயோகத்திற்குக் கேட்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

17th August 1960]

SRI N. R. THIAGARAJAN: இந்த குடவனுற்றுத் தண்ணீரைக் குளித்தலை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டு மென்று அந்தத் தொகுதி அசெம்பிளி உறுப்பினர் கேட்டுக் கொண்டிருந்தார். அதைப் பற்றி அரசாங்கம் கவனிப்பதாகப் பதில் கூறியதாகத் தெரிகிறது. திண்டுக்கல்லில் குடவனுறு திட்டமும், நிலக்கோட்டையில் ஒரு திட்டமும், வேடசந்தூரில் ஒரு திட்டமும் போட்டு நிறைவேற்ற அரசாங்கமும் முன்வருமா? குளித்தலைவாசிகள் கோரிக்கையை அரசாங்கம் கவனிக்காது என்று பதில் சொல்லுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தக் குளித்தலைக்கும் குடவனுறு ஓடுவதற்கும் இடையில் 30 மைல் இருக்கிறது. குளித்தலை காவிரி ஆற்றங்கரையில் இருக்கிறது. அங்கு 30 மைல் தூரத்தில் உள்ள ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு செல்வது உசிதமல்ல. இந்த ஆறு திண்டுக்கல் தாலுகா வழியாகப் போகிறது.

Visit of foreign dignitaries

*220 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிட் பாரா—

(அ) 1959–60-ல் வெளிநாட்டுத் தலைவர்கள் எத்தனை பேர் நம் மாநிலத்திற்கு வந்தனர்?

(ஆ) எந்தெந்த நாட்டுத் தலைவர், யார் யார் வந்தனர்?

(இ) எங்கு தங்கினர், என்ன செலவாயிற்று?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*): The following three leaders from foreign countries visited Madras during the period from 1st April 1959 to 31st March 1960:—

(1) His Excellency Mr. Tage Erlander, Prime Minister of Sweden.

(2) His Excellency Mr. K. E. Voroshilov, President of the U.S.S.R.

(3) His Excellency Dr. V. J. Sukeelainen, Prime Minister of Finland.

(*c*) At Madras all the three leaders stayed at Raj Bhavan, Guindy. The Prime Minister of Sweden visited Madurai and Tirupathur (Ramanathapuram district) also and he stayed at the Circuit House at Madurai and at the Swedish Mission Hospital of Tirupathur. The figures of the expenditure incurred on the visits of these leaders are not readily available, and the time and labour involved in collecting the information will not be commensurate with the public interest served.

SRI A. VEDARATHNAM: அந்தத் தலைவர்கள் அனைவரும் பார்வையாளர்களாகத்தான் வந்தார்களா? அல்லது வேறு என்ன ஜோலியாக வந்தார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: நம் நாட்டையும் நம் நாட்டு மக்களையும் பார்ப்பதற்காக வந்தார்கள்.